


– வாழ்வோம்

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர், ஆய்வறிஞர் கலையரசன் காவல்துறையினரால் மிரட்டப்பட்ட விவகாரத்தில், ஊடகவியலாளர் அரவிந்தாக்ஷன் எழுப்பியுள்ள கேள்விகள் இவை.

`பேராசிரியர் கலையரசன் விவகாரத்தில் புகார் கொடுத்தது யார்?' `தெரியாது'. `ONLINE, EMAIL, IN PERSON என எந்த முறையில் புகார் பெறப்பட்டது?' `தெரியாது'. `முறைப்படி புகாருக்கு CSR வழங்கப்பட்டதா?' `தெரியாது'. `வெறும் புகைப்படத்தை வைத்து, முகவரியைக் கண்டறிந்தது எப்படி?' `தெரியாது'. `பம்மல் காவல்துறை- சைபர் க்ரைம் பிரிவின் உதவியைக் கோரி, முறைப்படி கடிதம் கொடுத்ததா?'`தெரியாது'. `INSTAGRAM கமெண்ட் தொடர்பான புகாரை விசாரிக்க உத்தரவிட்டது யார்? JC யா ? DC யா? AC யா?'`தெரியாது'.

'எதுவும் தெரியாது! யாருக்கும் தெரியாது!'

`சம்பந்தப்பட்ட புகார் மனுவை, விசாரிக்க நியமிக்கப்பட்ட IO யார்?' `தெரியாது'. `புகார் தொடர்பாக காவல்நிலையத்தில் FIR பதியப் பட்டதா?'`தெரியாது'.`இன்ஸ்டாகிராமில் கமெண்ட் செய்த ID-ன் PROFILE PICTURE-ன் முகவரியை போலீஸாருக்குக் கொடுத்தது யார்?'`தெரியாது'. `கலையரசன் வீட்டிற்கு அதிகாலை 5 மணிக்குப் போக உத்தரவிட்டது யார்?' `தெரியாது'.

`மஃப்டியில் சென்ற போலீஸார் LAW & ORDER போலீஸா? SPECIAL TEAM ஏதேனுமா?'`தெரியாது'. `கலையரசனைக் கடத்திச்செல்ல பயன்படுத்திய காருக்கு வாடகை செலுத்தியது யார்?' `தெரியாது'. `கடத்தலுக்குப் பயன்படுத்திய கார்...' `பம்மல் காவல்நிலையம் சார்பில், முறைப்படி வாடகைக்கு எடுக்கப்பட்டதா?'`தெரியாது'.`NIGHT DUTY- போலீஸார் வாடகை காரை எடுத்துச்சென்று, கலையரசனைக் கடத்தி வர சென்றது T-4 SHANKAR NAGAR, PAMMAL SHO-விற்குத் தெரியுமா?' `தெரியாது'.

`முறைப்படி INSTAGRAM-நிறுவனத்திடம் இருந்து, காவல்துறை சார்பில் முறைப்படி தரவுகள் பெறப்பட்டதா?' `தெரியாது'. `கலையரசனைக் கடத்திச்சென்ற போலீஸார் யாரிடம் அந்த தகவல்களைப் பரிமாறினர்?' `தெரியாது'.`சரி...யார் கலையரசனை விடுவிக்க உத்தரவிட்டது?'`தெரியாது'. இப்படி இந்தச் சம்பவத்தில் நடந்த எதுவுமே யாருக்கும் தெரியாது.. எந்தக் கேள்விக்கும் பதில் இல்லை. ஆனாலும் 4 FOLLOWERS இருக்கும் ஒரு INSTAGRAM FAKE ID பதிவிட்ட ஒரு மோசமான கமெண்ட்டுக்காக நேரம் காலம் பார்க்காமல் சட்டத்தை நிலைநாட்ட காவல்துறை உழைத்துள்ளது"என விமர்சனம் செய்துள்ளார்.

ஃப்ளாஷ்பேக்





த.இரா.தங்கதுரை

இளைஞர் அணி சுற்றுப்பயணம்!

1982-ஆம் ஆண்டில், இளைஞர் அணிக்கு இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் செயலாளராகக் கொண்ட அமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அப்போது, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்த இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள், பொள்ளாச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு வருகைதந்தார். அந்த நிகழ்ச்சியில், அன்று 30-வது வட்டச் செயலாளராக இருந்த என் தந்தை இரா. ராஜேந்திரன் அவர்கள், தலைவருக்குக் கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்பு அளித்தார். மேடையில், தலைவருடன் அண்ணன் மு.கண்ணப்பன் அவர்கள் இடம்பெற்றுள்ளார்.

– த.இரா.தங்கதுரை,
மாவட்ட மாணவர் அணி முன்னாள் அமைப்பாளர்,
பொள்ளாச்சி, கோவை தெற்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

காவத்தின் குரல்

'சின்னம்' சின்ன விவாதமல்ல!

தி.மு.க.வின் 'உதயசூரியன்' சின்னம் தொடர்பாக, அண்மையில் முன்வைக்கப்படும் ஒரு விவாதம், விவாதிக்கப்படவேண்டியதாக இருக்கிறது. ஜெ.பாலசுப்பிரமணியம் எழுதிய 'தமிழகத்தில் அம்பேத்கரிய இதழ்கள்' நூலை ஆதாரமாகக் கொண்டு, 1939-இல் தொடங்கப் பட்ட 'உதயசூரியன்' இதழ், தோல்பதனிடும் தலித் தொழிலாளர்களின் இடதுசாரிக் குரலாக 1948 -ஆம் ஆண்டு வரை வெளிவந்ததாகவும், அதன் பெயரிலிருந்துதான் தி.மு.க.வுக்கு உதயசூரியன் சின்னம் கிடைத்ததாகவும் கூறப்படுகிறது. 'உதயசூரியன்' என்கிற இதழ் வெளிவந்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த 'உதயசூரியன்'தான் தி.மு.க.வின் தேர்தல் சின்னமான 'உதயசூரியன்' என்று உரிமை கோருவது நகைப்புக்கு உரியது.

வட ஆற்காடு பகுதியின் தோல்பதனிடும் தொழிலாளர்களுக்காக ஜெ.ஜெ.தாஸ் மற்றும் வி.ஆதிமூலம் ஆகியோர் தொடர்புடைய தொழிற்சங்கச் செயல்பாடுகளின் பின்னணியில் 'உதயசூரியன்' இதழ் வெளிவந்தது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக மட்டுமல்லாமல், வர்க்கச் சுரண்டலுக்கு எதிராகவும் அது குரல்கொடுத்தது. மார்க்ஸ், லெனின் உள்ளிட்ட இடதுசாரி சிந்தனையாளர்கள் பற்றிய கருத்துகளும், தொழிலாளர்களின் பிரச்சினைகளும் அதில் இடம்பெற்றன. இந்த வரலாற்றை நாம் போற்றுகிறோம். தலித் இதழியல் வரலாற்றில் அந்த இதழுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து எவருக்கும் இருக்க முடியாது.

ஆனால், ஓர் இதழ் முதலில் ஒரு பெயரைப் பயன்படுத்தியது என்பதற்கும், பல ஆண்டு களுக்குப் பிறகு அதே பெயரைக் கொண்ட குறியீட்டை ஒரு அரசியல் கட்சி தேர்தல் சின்னமாகப் பெற்றதற்கும் வேறுபாடு இருக்கிறது. 1939-இல் 'உதயசூரியன்' இதழ் வெளிவந்தது என்பதிலிருந்து, 1958-இல் தி.மு.க.வுக்கு அந்தச் சின்னம் கிடைத்ததற்கான நேரடிக் காரணம், அந்த இதழ்தான் என்று முடிவு செய்துவிட முடியாது. இதழின் பெயரை அண்ணா அறிந்திருந்தாரா.. அதனால், சின்னத்தைத் தேர்ந்தெடுத்தாரா என்பதற்கான நேரடி ஆதாரம் எதுவுமில்லை.

1929-இல் செங்கல்பட்டில், தந்தை பெரியார் நடத்திய மாகாண சுயமரியாதை முதல் மாநாட்டுடன் 'உதயசூரியன்' குறியீட்டைத் தொடர்புபடுத்தும் வரலாற்றுக் குறிப்புகளும் உள்ளன. அம்மாநாட்டில் 'உதயசூரியன்' கொடி, இலச்சினை போன்றவை விடியலின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டன. மாநாட்டு முகப்பில் சூரியக் கதிர்களில் திராவிட இயக்கத் தலைவர்களின் படங்கள் வரையப்பட்டு, அலங்காரம் செய்யப்பட்டி ருந்தன.

இங்கு, மறைந்த ஏ.கோவிந்தசாமியின் பங்களிப்பையும் புறக்கணிக்க முடியாது. 'தி இந்து' வெளியிட்ட செய்தியில், அரசியல் ஆய்வாளர் ஆர்.கண்ணன் கூறுவதன்படி, ஏ.கோவிந்தசாமி 1954-இல் உழைப்பாளர் பொதுநலக் கட்சியை மீண்டும் செயல்படுத்திய போது, 'உதயசூரியன்' சின்னத்தைத் தேர்ந் தெடுத்தார். பின்னர், தி.மு.க.வுக்காக அண்ணா அந்தச் சின்னத்தைத் தேர்தல் ஆணையத்திடம் கோரியதாகவும் அவர் விளக்குகிறார். இந்தக் குறிப்பு, ஏ.கோவிந்தசாமியின் அரசியல் பங்களிப்புக்கும் சின்னத்தின் தேர்தல் வரலாற்றுக்கும் தொடர்பு இருப்பதைச் சுட்டுகிறது.

1952-இல் ஏ.கோவிந்தசாமி, விக்கிரவாண்டி தொகுதியில் எஸ்.எஸ்.ராமசாமி படையாட்சியார் தலைமையிலான உழைப்பாளர் பொதுநலக் கட்சி சார்பாகத்தான் போட்டியிட்டாரே தவிர, தி.மு.க. சார்பில் அல்ல. அத்தேர்தலில் தி.மு.க. போட்டியிடாத நிலையில், 'திராவிட நாடு' கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய ஏ.கோவிந்தசாமிக்கு, திராவிடர் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தல் பணி செய்து வெற்றிபெற வைத்தார்கள். அத்தேர்தலில், அவருக்கு வழங்கப்பட்ட சின்னம் 'சேவல்'. உழைப்பாளர் பொதுநலக் கட்சி, தேர்தல் அங்கீகாரம் பெறாத கட்சியாக இருந்தமையால், போட்டியிட்டவர்கள் சுயேச்சை சின்னமான 'சேவல்' சின்னத்தைப் பெற்றுப் போட்டியிட்டார்கள். அதே தேர்தலில் 'உதயசூரியன்' சின்னமும் சுயேச்சை சின்னம்தான். அந்தச் சின்னத்திலும் சுயேச்சை வேட் பாளர்கள் போட்டியிட்டதுண்டு.

விக்கிரவாண்டியில் வென்று ஏ.கோவிந்தசாமி எம்.எல்.ஏ ஆன நிலையில், உழைப்பாளர் பொதுநலக் கட்சியும், காமன் வீல் கட்சியும் மைனாரிட்டி ஆட்சி அமைத்த ராஜாஜிக்கு ஆதரவாக காங்கிரஸில் சேர்ந்தனர்.

இப்போது, த.வெ.க.வுக்கு ஆதரவாக எவராலும் ஏற்க முடியாத முடிவை, காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகள் எடுத்ததைப் போன்ற சந்தர்ப்பவாத முடிவு அது. இதை ஏற்காத தன்மானமுள்ள ஏ.கோவிந்தசாமி, உழவர் கட்சி என்கிற புதிய கட்சியை உருவாக்கினார். தமிழறிஞர் திருக்குறள் முனுசாமிகூட




யுவகிருஷ்ணா ■

இந்தக் கட்சியில் இருந்தார். 1953-இல் மும்முனைப் போராட்டம் நடந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், எம்.எல்.ஏ.வான கோவிந்தசாமி, தாமாகவே முன்வந்து தி.மு.க.வில் இணைந்தார். தி.மு.க. கொள்கைகளைச் சட்டமன்றத்தில் முழங்கினார்.

அடுத்து வந்த உள்ளாட்சித் தேர்தலிலும் எம்.எல்.ஏ.வாக இருந்துகொண்டே, ஜில்லா போர்டு பதவிக்குப் போட்டியிட்டார். அப்போது அவருக்கு வழங்கப்பட்ட சுயேச்சை சின்னம், 'உதயசூரியன்'.

எனவே, சின்னத்தை தி.மு.க.வுக்கு வழங்கியவர் ஏ.கோவிந்தசாமி என்று சொல்வதைவிட, அவர் பயன்படுத்திய சின்னத்தை தி.மு.க. அதிகாரபூர்வமாகப் பெறுவதில், அவரது பங்களிப்பு இருந்ததாகக் கூறுவதே துல்லியமானது.



■ 'உதயசூரியன்' நாடகம்

இவை ஒன்றுக்கொன்று முரணான விளக்கங்களாக இருக்கவேண்டியதில்லை. ஆனால், எந்தக் காரணம் இறுதியானது என்பதை நிரூபிக்க முதன்மை ஆவணங்கள் அவசியம். அதேபோல், டாக்டர் கலைஞர் அவர்களின் உதயசூரியன் நாடகம், 'சின்ன'த் தேர்வுக்கான ஊக்கமாக இருந்ததாக வரலாற்றாசிரியர் எஸ்.முத்தையாவின் நூல் ஒன்றிலும் குறிப்புகள் உண்டு.

1957-ஆம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தலில், தி.மு.க. அங்கீகரிக்கப்பட்ட கட்சி யாகப் போட்டியிடவில்லை. அதன் வேட்பாளர்கள் சுயேச்சைகளாகப் பதிவு செய்யப்பட்டு, வெவ்வேறு சின்னங்களில் போட்டியிட்டனர். அண்ணா, கலைஞர் உள்ளிட்ட பலருக்கும் உதயசூரியன் சின்னம் ஒதுக்கப்பட்டிருந் தாலும், அப்போது அது தி.மு.க.வின் அதிகாரபூர்வ பொதுச் சின்னமாக இருக்க வில்லை. 1958 -ஆம் ஆண்டு மார்ச் 2-இல், தி.மு.க.வுக்கு அரசியல் கட்சி அங்கீகாரமும் உதயசூரியன் சின்னமும் கிடைத்ததாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன. இதுவே, தமிழ்நாடு தேர்தல் வரலாற்றில் முக்கியமான திருப்பம்.

ஆக, தலித் தொழிலாளர்களின் இடது சாரி இதழியல் மரபையும், திராவிட இயக்கத்தின் குறியீட்டு மரபையும், ஏ.கோவிந்தசாமியின் பங்களிப்பையும் தனித்தனியாக ஆராய வேண்டும். 'உதய சூரியன்' இதழின் வரலாற்றை வெளிச்சத் துக்குக் கொண்டுவருவது அவசியம். ஆனால், அந்த இதழின் பெயர்தான் தி.மு.க.வின் தேர்தல் சின்னத் துக்கான நேரடிக் காரணம் என்று நிரூபிக்க, பெயர் ஒற்றுமை மட்டும் போதாது. வரலாற்றைச் சமூக உரிமைப் போட்டியாக மாற்றாமல், ஆவணங்களின் அடிப்படை யில் ஆராய்வதே சரியான அணுகுமுறை.

எது எப்படியோ, கட்டு ரையின் தொடக்கத்தில் நாம் குறிப்பிட்டதைப் போல ஓர் அரசியல் கட்சிக்குத் தேர்தல் சின்னத்தைத் தனி மனிதர்களோ, இயக்கங் களோ, சாதிகளோ, சங்கங் களோ வழங்க முடியாது. தேர்தல் கமிஷன்தான் வழங்க முடியும். அதற்கும் விதிமுறைகள் உண்டு. அந்த குறிப்பிட்ட அரசியல் கட்சி, மாநிலக் கட்சியாகவோ தேசியக் கட்சியாகவோ அங்கீகாரம் பெற்றால்தான் ஒரு பொதுச் சின்னத்தைப் பெற முடியும்.

1957-இல் சுயேச்சை சின்னமான 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிட்டு வென்றதுடன், 1962-இல் தி.மு.க.வின் அதிகாரபூர்வ சின்னமான உதயசூரியனில் நின்று வென்றவர் கலைஞர். அந்த வகையில், 1957-இல் தொடங்கி, 2016 வரை 13 முறை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வென்று, இந்தியத் தேர்தல் வரலாற்றிலேயே ஒரே கட்சி, ஒரே சின்னம் என்று சாதனை படைத்தவர் டாக்டர் கலைஞர். 70 ஆண்டுக் காலமாக ஒரு கட்சி, ஒரே சின்னத்தில் போட்டியிடும் பெருமையையும் இந்தியாவிலேயே தி.மு.க. மட்டும்தான் பெற்றிருக்கிறது. ■

தெரிந்து கொள்வோம்

1952

சொந்தக் கட்டடமும் அச்சகமும்...

-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், ஈரோட்டில் கழகத்தின் பொதுக்குழு கூடியது. அந்தக் கூட்டத்தில் பேசிய பேரறிஞர் அண்ணா, முதல் மாநாட்டின் வரவு-செலவு அறிக்கையில், `அறிவகம்' கட்டடம் வாங்குவதற்கு மக்களிடம் வசூலித்த நிதி விவரங்களை விளக்கினார். மாநில மாநாட்டு மொத்த வரவு, ரூ.74,067. கட்டட நிதிக்காகத் திரட்டிய தொகை, ரூ.25,105. கழகச் செலவுக்காக நிதி வசூல், ரூ.2,500. மொத்தம் ரூ.1,01,672. மாநாட்டுச் செலவு போக, மீதத் தொகையைக் கொண்டு, சொந்த அச்சகம் நிறுவ உள்ளதாகவும் அறிவித்தார் அண்ணா.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900